**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

**E.A.No.5/2025 in EP 10/2003 in OS.NO.34/1984 PW1**

| | |
|---|---|
| Name | கௌரி மகேஷ்வரி |
| Husband/Father Name | மகேஷ்வரன் |
| Village /Area | சிப்காட் |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 01.04.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

எனது சாட்சியத்தை பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். எனக்கு படிக்க தெரியும். நான் சொன்னதை தான் டைப் செய்யப்பட்டுள்ளது.

பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு

1. -Ex.P1 – Certified copy of suit register extract.
2. -Ex.P2 – 15.05.1983 dated certified copy of the Registered sale deed executed by A.M. Wilson in favour C.R. Radhakrishnan vide doc.no.1350/1983.
3. -Ex.P3 – 12.09.1996 dated Certified copy of the registered sale deed executed by C.R.Radhakrishnan in favour of K.Vellaiappan vide doc.no.2862/1996.

4. -Ex.P4 – 24.02.2009 dated Certified copy of the Registered sale deed executed by N.Babu in favour of K.Vellaiappan vide doc.no.1308/2009.

5. -Ex.P5 – 14.01.2016 dated certified copy of the registered sale deed executed by N.Babu in favour of M.Gowrimagesh vide doc.no.229/2016.

6. -Ex.P6 – Online Encumbrance certificate for the period from 1975-2022.

7. -Ex.P7 – Photo of the house property pertaining to the Claim petition property.

8. -Ex.P8 – Online copy of the patta stands in the name of G.Gowrimagesh bearing patta no.365 in S.No.135/1C1B in New S.No.135/3 issue by the Special Deputy Tahsildar, Walaja Taluk.

9. -Ex.P9 – Original house tax receipt stands in the name of Gowrimagesh for the period of 2015 to 2016 (2 numbers).

10.-Ex.P10 – Original water tax receipt stands in the name of Gowrimagesh for the period of 2015 to 2016.

11.-Ex.P11 – Original Electricity consumption card in Sc.No.241-003-212.

12.-Ex.P12-Bank Letter from Union Bank, Arani Branch for retaining of original documents 27.02.2025 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் நீங்கள் தான் மனுதாரர் என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் எப்போதிலிருந்து குடியிருந்து வருகிறீர்கள் என்றால் நான் கிரயம் பெற்ற சமயத்தில் இருந்து குடியிருந்து வருகிறேன். எந்த தேதியில் மனு சொத்தை கிரயம் பெற்றீர்கள் என்றால் தேதி, மாதம் நினைவில்லை 2016 ல் கிரயம் பெற்றேன். நீங்கள் கிரயம் பெற்ற சமயம் அந்த பகுதியில் வீடுகள் இருந்ததா என்றால் ஆமாம். நீங்கள் கட்டியுள்ள வீட்டிற்கு வீட்டு வரி யார் கட்டி வருகிறார்கள் என்றால் நான் தான் கட்டி வருகிறேன். நீங்கள்

சொத்தை கிரயம் பெற்ற சமயத்தில் சொத்து தொடர்பாக நிறைவேற்று மனு 10/2003 நிலுவையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

வில்சன் என்பவருக்கும் ஜெயராஜ் என்பவருக்கும் சொத்து தொடர்பாக அசல் வழக்கு எண் 34/1984 நிலுவையில் இருந்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு எண் 34/1984 ல் வழக்கு முடிவுற்ற பிறகு இராணிப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சொத்து குறித்து ஜெயராஜ் பெயருக்கு 04.02.2002 அன்று கிரய பத்திரம் எழுதிக்கொடுத்தது அந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 வில்லங்கச்சான்றிதழில் entry No.57 ல் இராணிப்பேட்டை உரிமையில் நீதிமன்றம் ஜெயராஜ் பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் பதிவாகியுள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

14.01.2016 அன்று நீங்கள் சொத்தை கிரயம் பெற்றுள்ளீர்கள் ஜெயராஜ் பெயரில் ஏற்கனவே வில்லங்கம் இருப்பது தெரிந்திருந்தும் நீங்கள் சொத்தை கிரயம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. சொத்து குறித்து வழக்கு நிலுவையில் இருக்கும் போது எந்தவொரு நபரும் கிரயம் பெறக்கூடாது அது தான் சட்டம் என்று சொன்னால் எனக்கு வில்லங்கம் இருப்பது பற்றி தெரியாது. நீங்கள் தாக்கல் செய்துள்ள மின்வாரிய பயனீட்டாளர் அட்டை, வீட்டு வரி ரசீது, குடிநீர் வரி ரசீது, பட்டா உள்ளிட்ட ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. Decree Holder ஜெயராஜ் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் நீங்கள் கட்டிடம் கட்டுவதற்கு முன்பாகவே வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை தெரியப்படுத்தினார்கள் அதை கருத்தில் கொள்ளாமல் நீங்கள் கட்டிடத்தை கட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் அறிவிப்பு பலகை வைக்கபட்டிருந்தது அந்த அறிவிப்பு பலகையில் சொத்து தொடர்பாக வழக்கு நிலுவையில் இருப்பதாக சொல்லப்பட்டிருந்தது

என்றால் அவ்வாறு எந்த அறிவிப்பு பலகையும் வைக்கப்படவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் தெரிந்தும் நீங்கள் சொத்தை கிரயம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

சட்டவிதி முறைப்படி நீங்கள் தாக்கல் செய்துள்ள மனு ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. முறையாக சட்ட ஆலோசனை பெறாமல் சொத்தை கிரயம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. இந்த மனுவானது நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் நோக்கத்தில் தாக்கலாகியுள்ளது எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU Digitally signed by NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.